




ஓலை 82| ஓசை 205|ஆகஸ்ட் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

## பொருள்

தன்னையே தோண்டினாலும்
தோண்டுபவர் விழுந்துவிடாதபடி தாங்கும் நிலம் போல,
தன்னை வார்த்தைகளால் அவமதிப்பவரையும்
மதித்துப் பொறுப்பது முதன்மை அறம்

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# விற்கப் படாத கொள்கையே வீறு!

பா வகை: சிந்து என்ற இசைப்பாடல்.
கழிநெடிலடியும் அளவடியும் வருகிற
எண்நாற் சீரிரட்டை வியனிலைச் சிந்து

எது கண்டும் அஞ்சாமல் இடருக்கு பணியாமல்
ஏற்றுகின்ற கொள்கையினை
இறுதிவரை பற்றிட்டால் - வாழ்வும்
யாவருக்கும் இனித்திடுமே ஏற்றங்கள் கண்டிடுமே
பொதுவினிலே நம்மனத்துள் பொங்கிவரும் தடைநூறே
புதையாமால் கொள்கையினை பூத்திடவே செய்திடுவோம் - அதுதானே
புதுபபாதை அழகாக புலர வைக்கும்



விற்கப் படாகொள்கை வீறென்றே அறிந்திடுக விடியலாக கொள்கையுமே
விரிந்திடுமே உணர்ந்திடுக - ஆதலால்
விண்முட்டி நிற்கட்டும் விளைந்தநல் கொள்கைதான்
புற்றாக இருக்காமல் புதப்பொலிவாய் நாள்தோறும்
பூக்கட்டும் நெறிமுறையாய் புவியினிலே உறுதியுடன் - கொள்கை
புகழ்சேர்க்கும் என்றென்றும் புதையுண்ட பின்னருமே

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# வினேஷ் போகாட்

ஊரறிய உலகரிய
எளிமையின் தோற்றமாய்
வலிமை பெற்று வந்தவள்.



மல்யுத்த களத்தில்
மரணத்தை தாண்டி
வென்றவள்.

பாலியல் சீண்டல் செய்த
பல அரக்கர்களை தோல் உரிக்க
போராட்ட களத்தில் நின்றவள்.

அரசியல் சூழ்ச்சியால்
நரிகளின் தந்திரத்தால் கூடியது
நூறு கிராம் எடை.
அவிழ்ந்தது  பாரத தாயின் உடை

பெற்ற தாய் பெறாத வலியை
இந்த பெண்ணினம் பெற்றது
அதில் கன்னியம் உள்ளது
இனி உன் தோல்வியிலும்
பல வெற்றிகள் தொடருது.

கவிஞர் ஞா. மணிமாறன், இரெட்டிடியூர்

# விடுதலைக் கொண்டாட்டத்தில்

தேடிச் சோறு தின்று நாளைப் போக்காது
வாடி வதங்கிப் போன தேசம் தன்னை
ஓடிவந்து காத்து ஒளியேற்றப் போராடி
நாடிய புகழெல்லாம் நமக்கே கொடுத்த
தியாகச் செம்மல்களை சிந்திப்போம்.

நாம் யாருக்கும் அடிமை அல்ல
நம் தேசம் நம் மக்கள் நாமே தலைமை
பாரதி வீறு கொண்டு பாடிச் சென்றான்
பாரினில் நம்மை உயர்த்தி வைத்தான்
கூடி எங்கும் கும்மாளம் கொண்டாட்டம்
விடுதலை கிடைத்த வேளை

இருளில் ஏற்றிய கொடி
இந்தியாவை ஒளியில் பேச வைக்கிறது
செந்தமிழ் நாடென்று தந்தையாக்கி
சிந்தையில் சிறப்புகளை செதுக்கி வைக்க
விந்தைகள் நிறைய விளைச்சலாக இந்தியா ஒளிர்கிறது
எங்கும் சிறப்பாய் நின்னைச் சில வரங்கள் கேட்பேன்
அவை நேரே இன்றெனக்குத் தருதல் வேண்டும்
இன்னும் முன்னேறி விண்ணைத் தொடும்
எண்ணங்களில் பாரதி எழுதியவை



இன்று ஈடேறி இந்தியா நிமிர்கிறது
குடியரசு கொண்டு கொடி நட்டோம்.
முடியாட்சி மறந்து முன்னேறுகிறோம்
அடிமை நிலை அழித்து ஆலயம் அமைத்தோம்
ஆயிரம் வாசல்கள் திறந்து
உலகை உள்ளே வரவைத்தோம்
எங்கும் அமைதி என்பதை நோக்கியே
சமாதானப் புறா பறக்க வைக்கிறோம்
மழையாய் எல்லா தேசங்களுக்கும்
கருணைக்கரம் நீட்டி மகிழ்கிறோம்
வாழ்க நம் தேசம்
வளருவோம் நாமெல்லாம் வளமாக.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

# குறுங்கவிதைகள்

எப்போதும் போல்
காற்று உலுக்கும் கனியை
மடியேந்தி கொள்ள
வழக்கம் போல்
காத்திருக்கிறது நிலம்.
*

தண்ணீர் குவளையின்
வெளிப்புற விளிம்பில் நின்று
எட்டிப் பார்த்த எறும்புக்கு
கடலென விரிந்திருக்கும்
குவளைநீர்.
*

அந்திவேளை
களத்து மேட்டின்
நெற்போரின் மேல்;
மெல்ல மெல்ல ஏறி
அமர்ந்து கொண்டது.
மரத்தின் நிழல்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தண்ணீர் தினமா?



தண்ணீருக்கு ஒரு தினமா?
எனக்கேட்கும் நண்பா
செவிகொடு செப்புகிறேன்
நீர் பற்றி சில!

இவ்வுலகு வட்டம் என
வாஸ்கோடகாமாவுக்கு
சுற்றிக்காட்டியது நீரே!

தன்னைகடைந்து மின்சாரம் மூலம்
உலகுக்கு ஒளியூட்டியதும் நீரே!

உயிர்வாழ, பயிர்வாழ
உரமாவதும் நீரே!

உலகில் மூன்றில் ஒருபங்கு
நம் உடலில் முக்கால் பங்கு
நம் உதிர்த்தில் பாதி பங்கு
என பங்குபோட்டு நம்மைகாப்பது நீரே!

ஐயன் வள்ளுவன் தொடங்கி
உலக கவிகளின் கருப்பொருளானதும்
உலக வர்த்தகத்தின் ஈடுபொருளானதும்
நீரே!

பல ஏகாதிபத்தியங்களுக்கு
அடித்தளமிட்டதும்
சில நீராதிபத்தியமே!

ஆற்றங்கரை நாகரீகம் தொடங்கி
அரசமர பிள்ளையார் வரை
அழகூட்டியதும் நீரே!

காவியம் தொடங்கி
கவிதையில் வரை
காதலர்கள் கூடும்
நதிக்கரையில் தவளுவதும் நீரே!

இப்படி நீரில் நீயும் நானும்
திழைத்திருக்க நீரே விரும்பினும்
நீரின்றி அமையாது இவ்வுலகு!

கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன், தென்காசி

# மானங்காத்த மனு

ஒரு வெற்றிக்கு பின்னால் எல்லாம் மாறிவிடுகிறது
சிந்திய கண்ணீர் காய்ந்து விடுகிறது
கிளைகள் எல்லாம் வெளிச்சத்திற்கு வந்து விடுகிறது
இருட்டில் இருந்த வேரின் ஞாபகம் மறந்து விடுகிறது

நான்காண்டு தயாரிப்பு
நாள்பட்ட துயரம்
உண்ணாத நாட்கள்
உறங்காத இரவுகள்

இலக்கு சற்றே தவறி விட்டது
இதயம் நொறுங்க வில்லை
பதக்க மேடையில் பாரதம்
மக்கள் மனதில் நிற்பது பெருமிதம்



ஊருக்கு பாடமாகட்டும் என் வாழ்க்கை
அடுத்த தலைமுறை பீரிட்டு கிளம்பட்டும்
ஓர் நாளில் எல்லாம் மாறிவிடுகிறது
ஓர் நாளில் எதுவும் கைவரவில்லை

உழைப்பை மட்டுமே நம்பு
உலகம் உன்னை நம்பும் ஓர் நாள்
உனை நம்பு ஒவ்வொரு நாளும்
உச்சாணிக் கொம்பில் இருப்பாய் ஒரு நாள்

அன்னை தந்தைக்கு நன்றி
ஆசானுக்கு நன்றி
கேலி பேசியவர்களுக்கு நன்றி
முதுகின் பின் சிரித்தவர்களுக்கு நன்றி

எதிரிகளுக்கு நன்றி
பாராட்டியவர்களுக்கு நன்றி
தேச அபிமானிகளுக்கு நன்றி
கொண்டாடும் தேசத்திற்கு நன்றி

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு திருச்சி

# மணிமேகலை

## (இருபத்தி நான்கு)


23. சிறை விடு காதை

வாசந்தவை அரசன் துன்பங்களுக்கு ஆறுதல் கூறுபவள்
பாசத்தால் மீளாத்துயரில் இருந்தாள் அரசி இராசமாதேவி
"சோகத்தை விட்டு ஒழிக, உதயாகுமரனின் மரணம் காமம்
மோகத்தால் நிகழ்ந்தது நாட்டின் அரசி வருத்தப்படலாகாது"

அரசியோ பொய்யாக துயரத்தை மறைத்துக் கொண்டாள்
சரசமாக வாசந்தவை அறிவுரையை கேட்டவள் மனதில்
விரசமாக வஞ்சம் வகுத்தாள்,"விமாட்டேன் மணிமேகலை
தரமாக வாழ விடமாட்டேன் , அவளைப் பழிவாங்கியே தீர்வேன்"

"பாவம் மணிமேகலை சின்னப் பெண் அவள் என்ன செய்வாள்
கோபத்தில் அவளுக்கு சிறைத் தண்டனை ஆணையிட்டீர்
காவலில் இருப்பது அவள் தேகம் தாங்காது தீர்மானித்து விட்டேன்
ஆவலோடு என்னுடனே வைத்துக் கொள்கிறேன்" என்றாள் அரசனிடம்
தன் கட்டுப்பாட்டில் இருக்கும் மணிமேகலைக்கு பல இன்னல்கள்
வன்மையாக பித்தனாக்கும் மருந்தை உணவோடு கொடுத்தாள்
துன்பம் போக்கும் மணிமேகலை மருந்து ஒன்றும் செய்ய வில்லை
இன் முகம் மாறாமல் இருந்த அவளைக் கண்டு நடுங்கினாள் அரசி

அடுத்து அவளை வன்புணர்வு கொள்ள ஒரு மூடனை அனுப்பினாள்
இடும்பன் அவன் கள் உண்டு மணிமேகலை இருப்பிடம் வந்தான்
கடும் காமத்தோடு அவள் மீது பாய அவள் ஆண் உருவில் இருந்தாள்
திடுக்கிட்ட கள்ளன் பயந்து அlலறிக்கொண்டு வெளியே ஓடினான்

என் மகன் காம நோயால் இவள் பின்னால் அலைந்து மரணித்தான்
என்ன செய்தாலும் தண்டிக்கப் படாமல் உயிருடன் இருக்கிறாளே
வன் மகளான இவளை கொடிய நோய் தாக்கியதாக கூறினாள்
சின்ன காற்றுப் புகாத இருட்டு அறையில் அடைத்து வைத்தாள்

பலநாட்கள் உணவு இன்றி அவளை பட்டினியில் வாட விட்டாள்
சில நாட்களில் இறந்துவிடுவாள் ஆவலுடன் காத்திருந்தாள் அரசி
வலியள் உணவில்லாவாழும் மந்திரம் தெரிந்தவள் மணிமேகலை
அல்லது செய்தும் இவளை அழிக்க முடியவில்லையே குழம்பினாள்
நலமாக வாழவிடாமல் செய்த தவறுக்கு மன்னிப்பு கோரினாள் அரசி
( வலியள் : வலிமையுடையவள் )

மணிமேகலை அரசியிடம் மேலும் கூறினாள் காமத்தின் கொடுமை
பணிவோடு வாழ்ந்த சேனிய நங்கை கணவனால் கைவிடப் பட்டாள்
மணியான பிள்ளையை விட்டு வேறு ஊர் வந்தாள் கீழ்மகளானாள்
துணிவோடு ஒரு பார்ப்பனன் அவள் பிள்ளையை வளர்த்து வந்தான்
கணிகை மோகத்தில் பெற்றவள் என்று அறியாது தாயையே கூடினான்
உண்மையை அறிந்ததும் வெட்கி தற்கொலை செய்து கொண்டான்
(கணிகை ; பொதுமகள்.)

கள்ளின் தீமை, கொலையின் தீமை, பொய்யின் தீமை , களவின் தீமை
மெள்ளென இராசமாதேவிக்கு அவள் உனறும்படி எடுத்துக் கூறினாள்
எள்ளளவு கூட குறையற்ற மணிமேகலை தவ வாழ்க்கைபோற்றினாள்
உள்ளம் வருந்தி மனம் மாறி மணிமேகலையை விடுதலை செய்தாள் .

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# வினைத்தூய்மை

## அதிகாரம் : 66

துணைதரும் நன்மை
செல்வந் தரும்.
வினைதரும் செம்மை
விரும்புமெல்லாம் நல்கும்.




புகழறம் நல்கா
தூய்மையிலா செயல்வினையை.
எக்காலத்தும் செய்யாது
விட்டொழித்தல் நலம்.

உயர்மேன்மை எண்ணுவோர்
புகழ்கேட்டிற்கு ஈடான.
இழிச்செயல்வினை செய்யாது
இருத்தலே என்றும்நலம்.

கலக்கமில்லா அறிவுடையோர்
துன்பத்துழல நேரினும்.
இழிசெயல் எதனையும்
எப்பொழுதும் செய்திடார்.

பின்வருந்தத்தக்க பழிவினை
செய்தலாகா ஒருகால்தவறினும்.
பின்னொருமுறை மறந்தும்கூட
செய்யாதிருத்தல் நன்று.

ஈன்றதாயின் பசிகண்டு
வருந்த நேர்ந்திடினும்.
சான்றோரின் பழிக்கேதுவான
இழிச்செயல்கள் செய்தலாகா.

பழிபெருக்கும் இழிச்செயலால்
பெருகுஞ் செல்வத்திலும்.
நனிசெய் தூய்மையாலடையும்
வறுமை சாலச்சிறந்தது.

ஆகாதென சான்றோர்
விலக்குஞ் செயல்கடிந்து.
ஒதுக்காது செய்வோர்க்கு
அழிதுன்பத்தையே அதுநல்கும்.

பிறர்வருத்தி பெற்றபொருள்
பெற்றவனை அழச்செய்யும்.
சிறந்தவினை தரும்பொருள்
கரைந்தாலும் பின்பயன்தரும்.

வஞ்சித்தடைந்த பொருளால்
ஒருவனைக் காத்தலென்பது.
பச்சைமண்பானையில் நீரூற்றி
பத்திரமாய் வைத்தலுக்கொப்பாகும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# நலம்நிறை நங்கை!

நலம்நிறை நங்கை
நடந்தாள் அமைதியாய்.

பூஞ்சோலை தனிலே
பகன்றைக் கொடி!

பொதி நிறைவாய்
பொலிந்தது அதனில்.

விடியலில் புட்களின்
ஆனந்தப் பண்ணிசை

வான்பூ இதழவிழ
வாசம் பரவல்.

தண்கயக் கரையில்
தலைப்புடைத் துணிகள்

புலைத்தியோ புன்கண்ணில்
புலம்பினாள் புலம்பில்.

பரூஉ கிடை
புற்கள் மேய

தகைசால் மஞ்ஞை
அசைந்தே நடக்க

இயற்கைச் சூழலில்
இன்குரல் பாட்டொலி.



புலைத்தியின் புன்கண்
புகையெனக் கலைதல்.

வாகை மரத்தடியில்
வாகாய் அமர்ந்த

கன்னியின் குரலால்
தன்னை மறந்தாள்.

கயத்தில் தாமரை
காற்றில் அசைய

அஞ்சிறை தும்பியோ
அழகாய் ரீங்காரமிட

நங்கை தானும்
நண்ணினாள் தன்மனை.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# முத்துச் சிரிப்பழகே முடிச்சுப்போட நாவரவா

## எசப்பாட்டு



**ஆண்:**

கெண்டமீனுக் கண்ணுக்காரி
கெளுத்திமீனு ஒடம்புக்காரி
ஆத்து தண்ணியிலே
குத்தாட்டம் போடுவதென்ன?

**பெண்:**

வக்கனையா பேசாதீக
வம்பளத்துப் போகாதீக
வயசுபொண்ணு என்னைத்தான்
வளச்சிப்போட எண்ணாதீக

**ஆண்:**

பொய்யெல்லாம் பேசாதடி
உன்னாசையெல்லாம் தெரியுமடி
தெருவுல போகிறப்போ
ஓரக்கண்ணால பாத்ததென்ன

**பெண்:**

நாணொண்ணும் பாக்கலையே
சும்மாதான் சொல்லாதீக
கண்டபடி உளறாதீக
கன்னிப்பொண்ணு எங்கிட்ட

**ஆண்:**

ஆசையாச்சு ஒம்மேல
அத்தைமக ரத்தினமே
முத்துச் சிரிப்பழகே
முடிச்சுப்போட நாவரவா?

**பெண்:**

பேசித்தான் கவுத்துட்டியே
பேதலிக்குது ஏமனசு
தாலியக் கட்டுமய்யா
பொஞ்சாதியா ஆகிடறேன்

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# மண்சரிவு

செடி கொடி உதவுமென
முற்றத்தில் இருத்தி வைக்க
பெருங்காற்றில் சுருண்டு வீழ்ந்தது.
பார்த்துப் பழகிய இடம்
புதைந்து பாழ்பட்டு நிற்க.

புன்னகைத்த பெருங்குன்று
புதைகுழியாக மாறி நிற்க.
பாதை மறந்து போன உயிர்கள்.

வாக்கு கேட்க வந்த கூட்டம்
வலிக்கு ஆறுதல் சொல்ல
நாள் தேடுகிறது.



விடியல் மறைத்த நிகழ்வுகள்
வலி தாங்கிய பொழுதுகள்.
பேரிடர் தந்த துன்பம்
காக்க மறந்த அரசு.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# காயங்கள் ஏன் கொடுத்தாய்?

மானுடனின் வேதனை ஒன்று இரண்டா
காயங்களோடு மனதில் வாழ்ந்து வருகிறான்
சில காயங்கள் உயிரை கொல்லும்
வலியும் வேதனையும் அனுபவித்துப் பார்
கண்ணீர் தான் மிஞ்சும் இறைவா
வழியைத் தேடிப் போனாலும் அனாதையே
உறவுகள் இருந்தும் பலன் இல்லை
குறைகளை கண்டறிவது சிலரதுச் செயல்
குறையில்லா மனிதன் உண்டோ இவ்வுலகில்
ஐவிரல் ஒன்று போல் இல்லை
உடலில் ஊனம் இருந்தாலும் கவலையில்லை
தன் மானத்தோடு வாழ்ந்தால் போதும்
ஒவ்வொரு நாளும் போராட வேண்டியது
துயரங்கள் வந்தாலும் துடைத்தெறிய வேண்டும்
எங்களுக்கு விடிவு காலம் பிறக்குமா
காலம் தான் பதில் சொல்லும்
போராட்டாமே எங்கள் வாழ்க்கை ஆனது
காயங்களை கண்டு எனக்கு பயமில்லை
வாழ பழகி நாள்களும் நகர்ந்தது



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# தோழிக்கு பிறந்தநாள் வாழ்த்து

## குறள் வெண்பா

1.பாதை அறியும் பதுமையின் சிற்பமாய்
கோதை மனத்தினைக் கொள்

2.கோவில் சுவாமி சுழன்று வணங்கிடும்உன்
நாவின் புலமை நயந்து

3.நாளைய வாழ்வினை நன்றாய் அறிந்திடுவாள்
வேளைப் பொழுதினை வென்று

4.துருவ திசையெங்கும் தோழி நினைவு
அரும்பாய் புகட்டிடுவாள் அன்பு

5.விண்மீன் நிலவும் விரலாக உன்கையில்
பண்பும் பயனும் பலன்




6.செகமும் வளம்வருவாய் செந்தமிழ் நாட்டில்
அகமும் புறமும் அறிந்து

7.வாழ்வும் அறிவும் வளமாய் அமையட்டும்
தாழ்வு மனத்தை தகர்த்து

8.ரேவதியின் உள்ளன்பு ருத்தரத்தின் தாண்டவம்
தேவதையின் கண்ணே துயில்

9.இளமை அழகினில் இன்பமுடன் நாளும்
வளமுடன் வாழ்ந்திட வாழ்த்து

10.வாழிய பல்லாண்டு வாழியவே தோழியென்றும்
நாழிகையும் உன்பிறந்த நாள்

கவிஞர் ஈ. தேவணிதேன், பல்லடம்

# மறைந்த என் நட்பு

காற்றில் வந்த செய்தி ஒன்று
காணாமல் போனது என் நட்பு என்று
என்ன தவம் செய்து பெற்ற நட்போ
அது இன்று வரை தெரியவில்லை
எவ்வினையின் திணையோ அது
பிரிந்த காரணம் புரியவில்லை
ஊரார் போற்ற உள்ளூர் மகிழ
சுற்று வட்டாரம் பார்த்து ரசிக்க
குதூகலமான நட்பு அது
வர்ணிக்க வார்த்தையற்று வாழ்ந்திட வழியின்றி
வாழாக் குறையாய் பிரிந்தது இன்று

இறுதி வரை உன்னோடு மட்டும்
இரு கரம் இருக கோர்த்து
உயிரோடு இருக்கும் வரை வருவேனென
இணைந்த போது கூறிய வார்த்தைகள்
இன்று மறந்ததோ என்னவோ
இனிதே விடை பெற்று இருளை தந்து
என்னை மறந்து சென்றது நட்பு



கவிஞர் அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம்

# வில்லேந்திய புருவங்கள்

கூர்மையான அம்பு
தைத்ததேனோ
என் இதயத்தில்
வில்லேந்திய புருவங்கள்
உயர்த்திய
உந்தன்
பார்வையில் தானோ



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# கடவுளின் கோபம்

கண்கள் கலங்கி மனம்
பதறிப் போகுதே
உன் கோர முகம் பார்த்து!
பொறுமைக்கு பூமியே நிகரென்றது
பொய்த்துப் போனதே!
பொறுத்தது போதுமென்று
பொங்கியெழுந்து உன்
இருப்பைக் காட்டி விட்டாயே!
மனிதனின் மூச்சுக்காற்று பட்டு
நீயும் குணம் மாறிப்போனாயோ?
உன்னகத்தே இருந்த கட்டழகு
ஓரிரவில் சௌந்தர்யம் இழந்ததோ?
கடவுளின் சொர்க்கம் இன்று
தடம் மாறிப் போனதே!
மன்னிக்கும் மாண்பை இழந்து
அடாது செய்த மனிதனை
மீளாத்துயரில் புரட்டிப் போட்டு
பழியேற்றுக் கொண்டதோ?
இயற்கை!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# தேநீர்

காலை நேர விடியலின்
இனிக்கும் பாதயாத்திரை

ஒரு குவளை முத்தம்
நாள்தோறும் இனிப்பாய்

தேநீர் பலருக்கும் காலைநேர
கவிதை வரிகளாய்

படைப்பாளிகளின் எழுதுகோலில்
தேநீரின் கறைகள் இலக்கியமாய்

தெருவோர தேநீர் கடைகள்
பலருக்கும் அரசியல் மேடைகளாய்



தேநீர் கடைகள் கிராமங்களின்
அஞ்சல் முகவரியாய்

நாள்தோறும் தேநீர் கோப்பைகளில்
ஏழ்மையின் உதடுகள் உற்சாகமாய்

வேண்டும் தேநீர் கடைகளுக்கு
தேசிய அங்கீகாரம்

இது ஏழைகளின் சூடான
விண்ணப்பம்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# முருகா

கண்மூடி நானிருந்தால்
காண்கிறேன் உன்னை
கண்ணசைவாய் தீண்ட
கண்டுணர்கிறேன் என்னை

பூவாலே அர்ச்சிக்க
பூத்திடுவாய் என்னுள்
பாவாலே யான்பாட
பரவிடுவேன் உன்னுள்

மனமெல்லாம் நீயிருக்க
மகிழ்ச்சிதான் எப்போதும்
தனமெல்லாம் தேடிவரும்
தனித்திருப்பேன் அப்போதும்

அறுகுண மழித்து
அழகுறச் செய்வாய்
அறுமுகம் காட்டி
உறுபகை கொய்வாய்

அருந்தமிழ் புகட்டும்
அறுமுக வேலா
ஆறுதல் தந்திடும்
அன்புடைத் தோழா



நித்த முன்னை
நினைக்க வைத்தாய்
சித்தத்தில் மந்திரம்
சரவணபவ தைத்தாய்

வஞ்ச மில்லா
வாழ்வைக் கொடு
பஞ்சபூத உடலில்
பிணியைத் தடு

கொஞ்சும் குமரனாய்
குடிகொண்டாய் என்னுள்
மிஞ்சிடும் பக்தியோடு
கலந்தேன் உன்னுள்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# வாழ்வு

## தன்முனைச் சரம்

இருக்கும் நாளில்
இருந்து பார்ப்போர்
இறக்கும் நாளிலும்
இறவாமல் இருப்பார்
□
இருக்கும் இன்பம்
விரும்பிப் துய்ப்பார்
இல்லாதவர்க்கு மனம்
ஏங்கித் துடியார்
□
வருத்தம் தனதேயென
சறுக்கலில் ஆழ்ந்தவர்
வாழ்வின் சுழலில்
சிக்கி அமிழ்வார்
□
திருத்தம் செய்து
திருந்தி வாழ்பவர்
வருத்தம் தன்னை
விலக்கி வாழ்வார்
□
இன்பம் தன்னை
எதிலும் காண்பவர்
துன்பம் என்றும்
எதிலும் காணார்

அன்பு செய்யும்
எண்ணம் கொள்
இன்பம் உண்டு
நினைவில் கொள்
□
இலக்கை நோக்கி
வலக்கால் எடு
இடறில் இன்றி
செல்லும் வாழ்க்கை
□
புலம்பல் அன்றி
பொறுமை காப்பார்
புவனம் முற்றும்
அன்புடன் ஆள்வார்
□
மறுள் என
பொய்மையை அஞ்சுவார்
மறந்தும் பொய்மை
உரையா மேலார்
□
உறவு என்பது
உண்மையில் ஊறியது
உணர்ந்தால் அதன்
உயர்வு அறியலாம்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# யோசனை

யோசனை
பலமாகவே
இருந்தது

யோசிக்க யோசிக்க
இன்னும்
யோசனை அதிகமானது



யோசனையிலிருந்து
விடுவித்துக் கொள்ள
முயன்ற போதெல்லாம்

வெற்றியே கிடைத்தது
யோசனைக்கு
ஆர்ப்பாட்டமாய்
சில யோசனைகள்

அல்பத்தனமாய்
சில யோசனைகள்
அலுப்பூட்டுவதாய்
சில யோசனைகள்

ஒன்றுக்கொன்று
தொடர்பில்லா
யோசனைகளின்
வலைப்பின்னல்

யோசித்த களைப்பில்
உறங்கி எழுகையில்
உடனடியாக ஒரு யோசனை

யோசிக்காமல்
இருப்பதே வரமென

கவிஞர் அ. ஈடீத் ரேனா, புதுக்கோட்டை

# ஆண்டாளிடம் ஆடிப்பூரத்தில் அடியானின் விண்ணப்பம்

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! பெரியாழ்வார் தவப்புதல்வியே!
குடியெனது இனிதுவாழ குமரனிவனின் மைந்தன்
குகனின்மனம் செம்மையுற, ஆடிப்பூர மதிலவதரித்த
அன்னையே அதற்கொன்னையே கதியென நம்பியே
அடியேன் சரணடைந்தேன் நின்னிரு தாள்களிலே!

நானிலம் வாழ்வோர் கொண்ட ஆசைபோல்,
நாரணனை மணமுடிக்க நீயும்கொண்ட ஆசைபோல்,
அடியேன் எனக்கும் சிலவாசை உண்டு;
அதிலொன்றெந்தன் மைந்தனின் மணக்கோலத்தைக் காண்பதுவே!

நம்பியின் கைபற்றிய நங்கையுன்னைப் போலெந்தன்
நம்பிக்கும் வேண்டுவேனொரு நற்றிருமகளை இல்லாளாய்!
இல்லையென என்னிடம் இயம்பாது தாயேயென்
இல்லமவள் வந்திடவருள்க மிகமிக விரைவாக!



ஆடிப்பூரம் அவதரித்த அன்னையே உன்னிடம்
அடியேன் வேண்டும் வரமிது, இதனை
குரோதியின் மார்கழிக்குள் அருளிடவேண்டும் ஏனெனில்
குகனுக்கு அகவை இருபத்தி யொன்பதற்குள்
மணம்முடித்திட வேண்டுமென்பது எமதாசை தாயே!

மனத்தை உருக்கும் திருப்பாவை தந்தவளே
மனமழுக வேண்டுகிறேன், அவ்விதம்நீ அருளாவிடினும்
குரோதியைத் தொடர்ந்திடும் விசுவாவசுவா டிப்பூரத்திற்குள்
குகனவன் மணநாள் கண்டிட அருள்க தாயே!

குகனவனும் நின்னருளுடன் மகிழவேண்டும் நற்பணியுடனே!
அன்னைநீயெனக் குமேலுமொன் றருளிட வேண்டுமது
அன்பும் அழகும் அறிவும் நீண்டவாழ்நாளும்
அன்னையுந்தன் பரிபூரண அருளும்பெற்ற பெயர்த்தியை;
ஆன்றயில்லறம் என்பிள்ளைகள் கண்டவோராண்டின் நிறைவாய்!

அடியேனுக்கு இதனை நீயருளினால் வைப்பேன்
அன்னையுந்தன் திருப்பெயராம் "ஆண்டாள்" என்பதனை
அன்புடன் பெயர்த்தியை அழைத்திடும் வீட்டுப்பெயராய்!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

# முதுமை காதல்

அன்பு என்பதே
மலர் விரிவாகதன்றோ.

எத்தனை காலங்கள்
வாழ்ந்தாலும்
தொடர்வதன்றோ?

அன்பே அன்றலந்த மலர்
போன்றதல்லவா.

காதலுக்கு என்றேனும்
முதுமை உண்டோ!?



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# தொலைகிறாள் அவளாக

எத்தனை தொலைவிலும்
அவன் பார்வையில் அவளும்
அவள் பார்வையில் அவனும்
நிறைந்திருக்க.

தேடிய தேடலில் செவியோரம்
அவன் குரல் மட்டும் மூச்சிறைக்க.

ஓயாத உன் சிந்தனையில்
சிந்தையும் மரத்து
சிதைந்த அலரின் இதழாய்
ஊதைக்காற்றாய் மிதந்தே
பயணமாய்.



எல்லை தாண்டிய என்னவனை
எதிர்ப்பார்த்து காத்திருக்க
நிலவின் கூர்மையும்
இசை தழுவி நெஞ்சை உரசும்
வரிகளும் மென்மையாய் மனம் வருடி
மிதமாய் மாற்றும் கணமதில்
கரைந்தே வீ என உதிர்கிறேன்
நின் பார்வைக்கென.

கதைக்கும் விழியிரண்டும்
இமை விழிக்க மறுத்தே
ஆழ்கின்றன நித்திரை தொலைத்த
கனாவில் கணாளனருகில்
தொலைந்த அவளாக.

கவிஞர் சு. கார்த்திகா, பழநி

# வஞ்சித்தலைவி

மூக்குத்தி மரகதத் தாளிணை
இடப்பாதந்தாள் நளினங்
கண்டிவள் உள்ளங் கமழுதடி



உருகித்தனை இவர்தாள்
சிரந்தாழ்துயிர் விழி கரையுதடி

உற்றவளே என்னம்மையே
உயிரணைக்கும் தேவியே
பாதந்தழுவி மனம் மகிழுதடி


வேறாரும் உண்டோ
குரல்மொழி உறையுமுன் குறைதீரும்
குழல் வாய் மொழியாள் இவளடி

வஞ்சி தலைவி என்னம்மை
தேடி தினம் வந்தே னுனை
வஞ்சனை யில்லா மனத்தா ளிவள்
வஞ்சனையின்றி காத்தருள்வாய்!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# நான் அறியவில்லை

நான் அறியவில்லை
ஆம்!
அறிய முடியவில்லை அறிவியலின் பின்னணி
வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட
இடைவெளியில் இன்று பிறப்பு ஓர் கூற்றாக
ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையின் பின்னணியும்
பெரும் காயங்களுடன் காலங்காலமாக பல வரலாறு
அழிந்து தான் போகிறது நினைவு இருக்கும் வரை
நானும் அதை அறியவில்லை என் வாழ்க்கையும்.
தினம் ஒரு போராட்டம்
தினம் ஒரு திண்டாட்டம்
தினம் ஒரு நிபந்தனை கூட்டம்
தினம் ஒரு கடமை ஏற்றம்
தினம் ஒரு மடமை நாட்டம்
தினம் ஓர் குருதி ஓட்டம்
தினம் அறியாமை ஆட்டம்
தினம் அரங்க ஏமாற்றம்
தினம் வாழ்க்கை பெரும் நஷ்டம்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூர்த்தப்பூர்

# தொலைகிறேன்

ஆதி அந்தம் அறியா வாழ்வினிலே
சாதாரண பயணியான நிர்ணயிப்பு தனில்
இல்லாமையறிந்து இருப்பதாகிட வேண்டுமென வேண்டி
எண்ணவோட்டங்கள் சுழன்று கொண்டிருக்கையில்
எதை எதையோ தேடிய பயணங்களில் தொலைகிறேன் நான்

நான் எனும் என்னெல்லை தாண்டிய
வெளி உலகின் மீதான பயணப் பாதைகளிலே
வழிப்போக்கராய் இளைப்பாறும் குறுகிய நேரங்களில்
என் இயல் வாழ்வினை சிந்தனையால் மீட்கையில் உணர்கிறேன்
தியாகமெனும் வடிவில் தொலைகிறேன் நான் என



கனவுகள் எனும் தவப் போராட்டத்திற்காய்
இயலாமைகளையும் இயலுமைகளாக்கி
அனுசரிப்புக்கள் வழியே தன்னைத்தானே கட்டுப்படுத்தி
தூர நோக்காய் சிந்தித்து செயற்படுகையில் புரிகிறேன்
எனக்கான வழமையில் தொலைகிறேன் நான் என

குடும்ப உறவுகளின் அன்பு வலைக்குள் உரிமையாளினியாயினும்
நட்பெனும் அகராதிக்குள் தேடப்படுபவளாயினும்
யாவுமே அவ்வட்டாரங்களே என்றெண்ணி தஞ்சமாயிடினும்
முகமூடிகள் அணியப்பட்ட சில இரட்டை முகங்களைக் காண்கையில்
அவர்கள் மீதான நல்லபிப்பிராயத்திலிருந்து தொலைகிறேன் நான்

கிடைத்தவை யாவும் எனக்கானதென ஏற்று
கிடைக்காதவற்றை பிறருக்கானதென பொருந்திக்கொண்டு
கிடைத்தாகிட வேண்டுமேயான பிடிவாதங்களிலே
மன வழி தவிர்த்து மதி வழி செல்கையில்
நான் எனும் என்னியலிலே மொத்தமாய் தொலைகிறேன் நான்

கவிஞர் ஹாஸ்மியா தாஹா, தெக்கிராவ (இலங்கை)

# யாவும் நன்மைக்கே

உலக நியதியை
கடக்கும் பொழுதுகளில்
எத்தனையோ நிகழ்வுகள்
குறுக்கிடும் உன்னை

அதில் சில சந்தோஷங்கள்
இன்னும் சில சோகங்கள்
கொஞ்சமான வேதனைகள்
கெஞ்சலுக்கான நிமிடங்கள்



இத்தனையும் வந்து
உன்னோடு சேர்ந்து
பயணிக்க தொடங்குகையில்
பெரும்பாலும் வாழ்வு
கனக்கத் தொடங்கும்

இருந்தும் நினைவில் கொள்
கடந்திடும் நொடிகளில்
காண்பவை எல்லாம்
நல்லதற்கன்றி வேறில்லை

ஆதலால் தான்
யாவும் நன்மைக்கே!

கவிஞர் ஷப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை (இலங்கை)

# உலகச் சூரியன்

மானிட வம்சத்தின்
வர்க்க விருத்திக்கு
வித்தாக வேருன்றி
முளைவிடச் செய்பவள்

வாழ்வுப் பாதையில் அவளுக்கோ
பல்வேறு பரிணாமங்கள்
வாடியே நிற்காமல் அனைத்தையும்
திடமாக ஏற்பவள்



தாயாகத் தாரமாகத் தரணியை வலம்வர
சேயாகச் சேவகியாக
சலித்திடாமல் துலங்கி நிற்பவள்

சோதனை வேதனைகள்
நிழலாகத் தொடர்ந்து வர
சாதனை மங்கையாய்
சளைக்காது எதிர்த்து நிற்பவள்

பொன்னான மானத்தை
பழுதின்றிக் காத்திட
கண்ணாகவே தினமும்
கற்பைபேணிக் கருமங்கள் புரிபவள்

வன்சொல்லும் வன்மமும்
தலை விரித்தாடிட
இன்சொல்லுக்கு ஏங்கியே
இதயத்தைத் தொலைப்பவள்

தானீன்ற செல்வங்கள்
தரணியிலே வேரூன்ற
தன்னிலை மறந்தே
அனுதினமும் அயராதுழைப்பவள்

பதிசேவை செய்வதில்
பக்குவம் காத்து
மதிகொண்டு மனம்கொண்டு
மகிழ்வைத் தருபவள்

உலகின் விளக்காக
ஒளிவீசிப் பிரகாசிக்கும்
பெரும் பேறுபெற்ற பெண்மை
பெருமையுடன் வாழ்ந்திடுக

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# பசுமரத்து ஆணிபோல் பதியாதோ மனத்துள்

குளிர்நிழல் அளித்து, சூழலைக் காக்கின்ற
உலகின் நுரையீரல் மரங்களே! மிகையில்லை!
சாலையின் இருமருங்கும் நிழல்தரும் மரங்களெனில்
குளுமையான பயணம் மகிழ்வளிக்கும் மனத்திற்கு!
பெருகிடும் ஊர்திகளால் காற்றில் அதிகரிக்கும்
கரியமில வாயு! புவிவெப்பம் அதிகரிப்பு!
பொய்த்திடும் பருவமழை! பருவம் தவறி
பெய்கின்ற பெருமழை! பெருவெள்ளம்! நிலச்சரிவு!
காலநிலை மாற்றத்தின் கவலைதரும் நிகழ்வுகள்!
மரங்களின்றி புவியில் மனிதர்க்கு வாழ்வில்லை!
நெடுஞ்சாலை ஓரங்களில் நெடிதுயர்ந்த பெருமரங்கள் !
மரங்களின் உடலெங்கும் ஆணிகளை அடித்துத்
தொங்கவிட்ட விளம்பரப் பலகைகள்! பதாகைகள்!
உடலெங்கும் குழிகளை உண்டாக்கும் ஆணிகளால்
பட்டைகளில் காயங்கள்! அவற்றின் வழியே
உட்புகும் கிருமிகள், பூச்சிகளால் சேதங்கள்!
வேரிலிருந்து நீரேற்றம், சத்துகளைப் பரிமாற
சாரேற்றம் இவையெல்லாம் நாளங்களின் பாதிப்பால்
குறைந்திடும்! குறைத்திடும் மரங்களின் ஆயுளையும்!
துருப்பிடிக்கும் ஆணிகளால் பசுமரங்கள் பட்டுவிடும்!
வேர்கள் வலுவிழக்க, வீழ்கிறதே சூறைகாற்றினிலே!
வலிதாங்கி, உயிர்வளிதந்து சூழலைக் காக்கின்ற
குளிர்நிழல் மரங்களைக் காத்திடல் நம்கடனன்றோ?
விளம்பரப் பலகைகளை அகற்றிடுவோம் விரைவாக!
மஞ்சள்தூள், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய்
கொண்டு மூடிடுவோம் குழிகளை!குணமாகும்!
மரங்களில் வடுக்களை உண்டாக்கல் முறைதானா?
குற்றமென இதனை அறிவித்தல் மட்டுமின்றி
உரிய தண்டனைகள் அளிப்பதும் கட்டாயம்!
பசுமரத்தில் ஆணிகளை அடித்திடல் தவறென்று
பசுமரத்து ஆணிபோல் பதியவைப்போம் மனங்களிலே!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# தனிமை

எளிதில் எல்லோராலும்
ஏற்றுக்கொள்ள
இயலாத சொர்க்கமே
தனிமை.



பந்தங்கள் கடந்த
பற்றற்ற மனமுதிர்ச்சி.
பக்குவப்பட்டவர்களையிது
பாங்கோடு வழிநடத்தும்.

தோல்விகளாலும்
துரோகங்களாலும் இவர்களைத்
தோற்க இயலாது.

ஒவ்வொரு நிமிடங்களையும்
ரசித்து வாழும்
விசித்திர குணம்.
நதிபோல நகர்ந்திடுவர்.

இயற்கை இவர்களுடன் பேசும்
அஃறிணைகள் அன்பு செலுத்தும்.
இவர்களுலகம்
ஆச்சர்யங்களாலும் அதிசயங்களாலும்
நிறைந்ததே.

இப்பாதை தனக்கானதென்று
தடுமாறாமல் சென்று கொண்டே இருப்பர்.

இத்தனிமையை ஏற்க
தைரியமிருந்தால்
வழியெங்கும் பூ மலரும்.
இறுதிவரை உறுதி இருக்கும்.

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# மனவலிகள்

இழந்ததை மறக்க மனமில்லாமல்
சொல்லி ஆறுதல் தேட
மனமில்லாமல்.
சொற்கள் சொல்லி புரிய வைக்க இயலாமல்
புன்னகையுடன் பகலை கடத்தினாலும்.

பல இரவுகள்
தனிமையே நண்பனாக
கண்ணீரே ஆறுதலாக நின்றாலும்
நேரங்கள் நிமிடங்களாகி போக
உறக்கம் வராமல் உள்ளம் தவிக்கும்
மனவலியை யார் அறிவரோ?



கவிஞர் மு. கணேஷ், சேலம்

# கைப்பேசி



விழித்தவுடன் தேடியெடுத்து
விழிமூடினாலும் அருகினிலே
விநாடிபொழுது கைப்பேசி
வினையூக்கியாகவும்
விசையீர்ப்பாகவும்
வித்தியாச கைப்பேசி விதிமுறைகள்.

கரண்ட் இருக்கும்போதே சார்ஜ் போட்டுவிடு
காசு இருக்கும்போதே ரீசார்ஜ் செய்துவிடு
காலத்தில் வரும் சிறப்பு ஆஃபர்களை சரியாக பயன்படுத்து
கிறுக்குத்தனமான மணி பற்றிய மெசேஜ் நம்பாதே
கீழ்த்தரமான வீடியோக்கள் ஏற்றாதே
குறைந்த வெளிச்சத்தில் அதிக நேரம் பயன்படுத்தாதே
கூடா எதிர்பாலின நட்பு கேடாய் முடியும்
கெட்ட வதந்தியை பரப்பாதே
கேடுகெட்ட சூதாட்டத்தில் வாழ்வை இழக்காதே
கொலைவெறியாக எப்போதும் கையில் வைத்து அலையாதே
கோடி புண்ணியம் குடும்ப உறுப்பினர்களுடன்
சில நேரம் செலவிடு.
கௌரவம் என்று வட்டிகடன் வாங்கி செல்பேசி வாங்காதே .

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# உயிர் வாழ்க்கை

நீண்ட பிணி
இறுக்க முடியாத உயிரை
நீண்ட துணி
இறுக்கி முடித்து வைக்கிறது
அவ்வளவுதான் வாழ்க்கை



கவிஞர் கரு. ராமச்சந்திரன், அருப்புக்கோட்டை

# தேனீர் கோப்பை

இரவு போர்வைக்குள்ளிருந்து
மெல்ல சோம்பல் முறித்து
பறவைகளின் செல்லச்சிணுங்கல்களுடன்
அழகாய் பூக்கிறது விடியல்.
தேனீர் கோப்பை ஏந்திய கைகளுக்குள்!



கவிஞர் சாந்தாதேவி, சென்னை

# தொடர்வண்டியும் தொலைந்த வாழ்வும்

இயற்கையின் நடுவே கரடு முரடான பாதைகள்
இனிய பயணத்தை உருவாக்க வளங்களை நொறுக்கினான்
பாறைகளை உடைத்து கற்களாய் மாற்றினான்
இரும்பு துகள்களை ஒன்றிணைத்து தண்டவாளம் என்றான்
விலை நிலங்களை அழித்து வீழ்த்தினான்
வலியுடைய மக்களுக்கு வாழ்க்கை தருகிறேன்
என்றெல்லாம் பசப்பி பேசினான்
தண்டவாளம் வரும் ரயில் வரும் போக்குவரத்து வரும்
வாழ்வில் வளம் வரும் என்றான்
சுடுகாடாய் மாறியது பல தலைமுறைகளாய்
பயிர் வைத்த நிலங்கள்
கூட்டம் கூட்டமாக செல்கின்றனர் மகிழ்வோடு மக்கள்
தொடர்வண்டி பயணத்தில் குவியலாய் விழுகிறது நெகிழாழிகள்
இரைச்சல் சத்தம் மட்டும் குறையவில்லை
அது தொடர் வண்டி சத்தம் அல்ல
அங்கு வாழும் மக்களின் அழுகுரல்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சுராஜா, வளையமாதேவி (சிதம்பரம்)

# அன்பில் கலந்தே

நீ அர்த்தமற்றதை கூட
அர்த்தமாக்குகிறாய்
எனக்கு தான் அது புரியவேயில்லை
சோளக்கொல்லையில் கம்பு முளைத்தது போல
உனக்கும் எனக்குமானது காதல்.

பட்டாம்பூச்சிக்கு
யாரும் பரிவட்டம் கட்டுவதில்லை
அதுபோலவே
நமக்குள் எந்த பரிவட்டமின்றி
அன்பில் கலந்தே இருந்தோம் .

ஓர் நாள் நீ புன்னகையை இரண்டாக மடித்து
தாளில் தந்த போது
கண்ணீரால் நனைந்திருந்தது வரிகள்.



கவிஞர் ச. இராஜ்குமார், திருப்பத்தூர் மாவட்டம்

# முரண்

மாடி வீட்டு
ஜன்னலின் தேநீருக்கு
வரமாகிய
மழைத்துளிகள்
ஓலக் குடிசையின்
ஓட்டைகளில்
சாபம் சுமக்கின்றன.



மண் பாதையோ
மலைப் பாதையோ
வளைவுகள்தான்
வடிவங்கள்
மனம் நேராகட்டும்.

புத்தன் சிலைகள்தான்
அதிகம்
விற்பனையாகின்றன
போதி மரங்கள்
அல்ல.

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நட்பு என்னும் உயிர் மணம்



நட்பு என்பது உறவோ காதலோ அல்ல வாழ்வியல்
உண்மையான நட்பியல் உணர்வுடன் கலந்த உயிரியல்

நட்பு தாய்மைக்கு நிகரான
*தூய்மையின் அடையாளம்*

வருத்தம் கோபம் பிரிவு என இருந்தாலும் நட்பு
உரிமையில் ஒரு *பாசவலை*

நட்பு என்னும் பாசவலையில் சிக்கியவர்கள்
தடம் மாறுவதில்லை தரம் குறைவதில்லை

பணம் பார்த்து பழகுவது *உறவு*
நல்ல மணம் மட்டுமே நாடுவது *நட்பு*
உறவு பொறாமைபடும் நட்பு பொறுத்தருளும்.

பாதுகாப்பு என்னும் உணர்வு நட்பில் மட்டுமே உண்டு
நல்லநட்பு மட்டும் அமைந்து விட்டால்
வாழ்வில் என்றும் வசந்தமே.

உப்பு இல்லா பண்டம் குப்பையிலே
நல்ல *நட்பு* இல்லா வாழ்வு நரகத்திலே.

சிறகு கிடைத்தால் பறப்பதல்ல சிலுவை கிடைத்தாலும்
சுமப்பது தான் நட்பு நல்ல நட்பு அமைந்தவன்
புனிதனாக மட்டுமே இருக்க முடியும்
*பூக்களின் நறுமணமும்* நல்ல *நட்பில் உயிர் மனமும்*
என்றும் மாறாது.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# மலையும் மழையும்

உச்சி முகர்ந்த பச்சைக்குள்
ஓங்கி வளர்ந்த மலை
உறவாடும் காற்றோடு
துள்ளிடும் இயற்கையே.

மேகத்திரளை மென்று
விழுங்கினாயோ
கக்கித் துப்பி கபளீகரம்
செய்தாயோ

கோபத்தில் உருண்டு
கொள்ளை உயிரைக் குடித்தாயோ
துயரை தந்து செங்குழம்பாய்
இடம் பிடித்த ஆவேசம்

நீ பார்க்க அழகி ரசிக்க அழகி
பரவசத்திலே கண்மலர் மூடாது
மனப்பாரம் தொலைத்த
உன் மடியில்
புதையுண்ட ரகசியத்தை யாரறிவார்

மழையின் தவறா
மனிதனின் தவறா
மலையின் தவறா
மண்ணின் தவறா
யார் செய்த தவறோ



அளவைத் தாண்டினால்
அனைத்தும் கரைந்தோடி
கலந்து போகுமோ

எதுவும் நிரந்தரமில்லாது
நிலையில்லாத பூமியில்
நொடிகள் கூட கனவுதான்
நிமிடங்கள் நிச்சயமில்லை

நாளையென்பது வெறுங்கனவு
மலையும் மழையும்
உரசிய முத்தத்தின்
அகோரப்பசிக்கு அனைத்தும்
காட்டாற்று வெள்ளத்தின் மடிக்குள்
இயற்கையை அதை அப்படியே
ரசித்திடு மனங்களே
பேரழிவிற்கு முதல் புள்ளி மனிதனே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# பிரபஞ்சங்கள்

நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு
இவை ஐம்பூதங்கள் எனப்படும் பிரபஞ்சங்கள்.
நம்மில் ஒரு அங்கமாகவே இவைகள் செயல்படுகின்றனவே!
பிரபஞ்சங்கள் ஒரு நல்வழிகாட்டிகளே!
வானத்தை பார்த்தோமானால் எண்ணில் அடங்கா
மீன்நிலா என்று சொல்லப்படும்
நட்சத்திரக் கூட்டங்கள் நம்மை கண் சிமிட்டி
பரவசத்தில் ஆழ்த்துமே!




நம்மை சுற்றி எப்போதுமே
நல்ல செயல்களும் நல்மனிதர்கள் மூலம் நடக்குமே!
அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது என்றார்
நம் அவ்வை பிராட்டி.
மானிடப் பிறவியில் பிறந்தமைக்காக
மற்றவர்களுக்கு உதவிகரமாகவும் இறக்கத் தன்மையுடனும்
கருணை உள்ளத்துடனும் நல்ல வெற்றிகள் மூலம்
பிரபஞ்சம் நல் மனிதர்கள் மூலம் வழிகாட்டுமே!

எல்லோருக்கும் ஒரு கனவு வாழ்க்கையில் உண்டே!
கடந்த காலத்தில் எது நடந்திருப்பினும் ஒரு பொருட்டல்லவே!
பிரபஞ்சங்கள் நமக்கான பரிசை வழங்க தயாராகவே உள்ளது.
நாம் குறுக்கே நில்லாமல் வெற்றி காண்போமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# இலவச பேருந்து

பணம் இல்லா மனிதருக்கு
இனிமையாய் இருக்கிறது
இலவச பேருந்து.



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நிலவே நில் போகாதே

அந்த இளம்வெண்பஞ்சு முகில்களெல்லாம் தூங்கினதோ
முதிர்ச்சிகண்ட முகில்களுக்கெல்லாம் உற்சாகமோ

ஊர்ந்து விளையாட நிலவையும் மறைத்து மறைத்து விளையாட
நட்சத்திர கூட்டமோ கண்சிமிட்டி சிமிட்டி கொள்ள

நிலவே நீ நில் எங்கே செல்கிறாய்
நானொரு கதை பேச நீ அதை கேட்பாயோ

காவிய காதலிகளெல்லாம் உன்னை தரிசித்து தூதனுப்பியது போல
நானும் ரகசியத்தை உன்னிடம் ஒப்பிக்கட்டுமா

என் மகராசனை நீ காண்பாயோ
கண்டால் சொல்லி விடு நானொருத்தி நயமாக
நாளொருமேனியாய் உனக்கென காத்திருக்கிறேனென்று

ஊராரும் உறவுக்காரரும் கேட்குற கேள்விக்கெல்லாம்
பதிலின்றி மௌனம் காக்கிறேன்



மடிசாய மந்திரமெதற்கோ பாசமொழி போதுமே
நான் சேகரிக்கிறேன் உனக்கென்றே
நிலவே நில் போகாதே நீதி கேளாயோ
நியாயம் கேளாயோ

மன்னவனை அழைத்தே வாராயோ
மனம் அறிய காத்திருக்கிறேன்
வேர்த்து வழிய வேலையை பாடாய் செய்வாயோ
எனையுமே நினைப்பாயோ
உந்தன் நினைவின்றி நகராது நின்நினைவே
உன்னையன்றி யாரிடமும் செல்லாது
எனதான உனது காதலென சொல்லி வாராயோ

கவிஞர் சுஹ்னாஸ் பேகம், புத்தளம் (இலங்கை)

# காற்றுள்ள போதே!

காற்று
கதவைத் திறக்கும்.
அதனை இழுத்து மூடும்.
***

திறக்கும் போது
பிறக்கிறோம்.
இழுத்து மூடும் போது
இறக்கிறோம்.
***

இதற்கிடையில்
சிறக்கிறோம்.
செட்டை கட்டிப் பறக்கிறோம்.
***

பயணச் சீட்டு முடிந்ததும்
பாடை கட்டிப் போகிறோம்.
***

பாவ வீதி ஒரு புறம்.
புண்ணிய வீதி மறுபுறம்.
***

ஓம் மனிதா
ஓம்!
***



காற்று
கதவைத் திறக்கும்.
அதனை இழுத்து மூடும்.
***

இப்போது பதில் சொல்
உனக்குச் சுவர்க்கம் வேண்டுமா?
இல்லை இல்லை
நரகம் தான் வேண்டுமா?
***


புரிகிறதா, இப்போது
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
பாவங்கள் அனைத்தும் பறக்கட்டும்!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# மாலவனும் வைணவமும்

## பகுதி 43

ஆண்டாள் பகுதி 13 நாச்சியார் திருமொழி
இரண்டாம் திருமொழி பகுதி 05 (பாடல் 6முதல் 10வரை)




கோதைதன் நாச்சியார்பேர் திருமொழிகள் பதினான்கில்
இரண்டாவதில் பாடல்கள் ஆறுமுதல் பத்துவரை
ஐந்தினையும் இவ்வாரம் பாச்சுவையை மாந்துவமே!
ஆறாவது பாசுரத்தே ராதையவள் கண்ணனிடம்
கூறுவதாய் அமைந்ததுவே! சிற்றில்லை அழிப்பதனை
காட்சியாக்கி வேறொன்றை நினைக்கின்றாய்! நீசெய்யும்
செயல்கள்தம் உட்கருத்து யாமறியோம் என்றாலும்
துன்புறுத்தல் எங்கட்குச் செய்திடாதே! வேண்டலிதே!
ஏழாவது பாசுரத்தே கண்ணனவன் தர்மபத்தினி
மேலாணை இட்டவர்கள் சிற்றில்லைஅழிக்காதே
எனவேண்டல் வைக்கின்றார்! பேதமதுஅறிவாரிடம்
பேசிட்டால் இன்சுவையாம்! யாதொன்றும் அறியாதார்
தம்மிடையே பேசிடிலோ உனக்கன்றோ இனிதாகும்!
எங்கட்கு பெருந்துன்பம் மட்டிலுமே நண்ணிடுமே!
எட்டாவது பாசுரத்தே மனக்கசப்பில் பேரின்பச்
சுவையேதும் நண்ணாதே! விளையாட்டுப் பிள்ளைகள்
நாங்களிங்கு! எங்களது சிற்றில்லை அழிப்பதனால்
யாதுபயன்? சுவைக்கட்டியே கைக்குமெனில் செய்துன்பம்
பெருந்துயரே! வட்டவாயுடை சிறுபானை சின்னகுச்சி
மணலிவற்றால் விருப்பப்படி விளையாடுவோம்!அன்னதனை
கையதனால் கலைத்திட்டே காலதனால் உதைத்திட்டு
நீகூட்டும் துன்பந்தனை விட்டிடுநீ எனவேண்டல்!
கோதையவள் கண்ணனிடம் வேண்டுகின்றாள்! கிட்டிடுமா?
பாசுரயெண் ஒன்பதினில் கண்ணனோடு கோதைதானும்
கூடிக்களித் தநிகழ்வெலாம் கதையாகக் கற்பனையாய்
நின்றிடுமே! திருமுகத்தைக் காட்டிட்டேபுன்முறுவல்
கூட்டியுமே சிற்றில்லை அழிப்பாயேல் நெஞ்சழியும்!
எங்களைநீ அணைத்திட்டால் காண்பார்கள் என்சொல்வர்?
பத்தாவது பாசுரத்தே பலனுரைப்பார்! இப்பத்து
பாசுரத்தால் வைகுந்தமாம் பரமபதம் நிச்சயமே!

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# நீயில்லை என்றால் என்ன

வரிவையே நீயும் என்னை விட்டுச் சென்றால்
வாடி நான் நிற்கமாட்டேன் வசைகவி பொழிய மாட்டேன்.

இல்லை நீ என்று சொல்ல மாற்றான் மகள் தேடிப் போனேன்
மலர் கொண்டு விருப்பம் சொன்னேன்.

மறுத்தவள் விட்டாளென்று மாதரை வெறுக்க மாட்டேன்
வாழ்க்கையை துறக்க மாட்டேன்.

வீடுகள் தேடிச் செல்வேன்  விதவையை கண்டு கொள்வேன்.
வியப்பாக காதல் கதைகள் சொல்லி வியக்கச் செய்வேன்.

வேண்டாமென்று அவளும் சொன்னாள்
விடைபெற்று வீதிவந்தேன்.

விலைமகள் எதிரில் வந்தாள் வேதனை அதிகம் என்றால்
விரும்பியே காதல் சொன்னேன்.

வியப்பிலே விழுந்து போனாள் மடியிலே மயங்கிப் போனாள்
மனதுடன் மணந்து கொண்டேன்.

மனைவியாய் கூட வந்தாள் மனையிலே விளக்குமேற்றி
வகையாக சமயல் செய்து வயிறையும் நிறைத்து வைத்தாள்.

நல்லதோர் குடிமகளும் நாளையோர்நாள் விலைமகள் ஆகக் கூடும்,
நல்லதோர் கணவனைச் சேர்கையில் விலைமகளும் கலைமகளாகக் கூடும்.

காலத்தின் ஓட்டத்தில் கால்கள் பின்னி புரளக்கூடும் தரையில் - புவியில்.

புரட்சி செய்திடும் புத்திரர் எல்லாம் இறைச்சிதோல் விரும்புகிறார் மனித
இறைச்சிதோல் விரும்புகிறார்.

வேடங்கள் கலையும் போது வெளுத்துப் போகும் வண்ணங்கள்,
மேன்மையை விரும்பும் போது உயர்ந்து போகும் எண்ணங்கள்.
மனித எண்ணங்கள்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# தாய்த்தரும் அமிர்தம்

கருவிலே சுமந்தாய்
ஈன்று எடுத்தாய்
உன் உதிரத்தை தந்தாய்
பாலாகத் தந்தாய்
தாயே உந்தன் தியாகங்கள்
எண்ணிக்கை இல்லாததே.

இரவு பகல் விழித்திருந்து
மார்போடு என்னை அணைத்து
உந்தன் மடி சாய்த்து
என் பசி போக
பாலெனும் அமிர்தத்தை
ஊட்டும் தாயே.



அன்பையும் பண்பையும்
சேர்த்தே ஊட்டுவாயே
தாயே பொருண்மையின்
சிகரம் நீயே
உன்னைப் போற்றி
புகழ்கிறேன் நானே

கவிஞர் எச். டீ. எச் பஸ்ரீதா, கொழும்பு

# நீ உன்னை அறிந்தால்

## நாடகம் காட்சி-2

(மோகன் வீட்டின் முன்னறை. மோகன் புகைத்துக் கொண்டிருக்க, மல்லிகா உள்ளே வருகிறாள்.)

**மோகன்:**வாங்கம்மா, தேவிகா வெளியே போயிருக்கா என்ன விஷயம்?

**மல்லிகா:** அது வந்து...எப்படி சொல்றது..(அவள் முடிக்குமுன் தேவிகா உள்ளே வந்து)

**தேவிகா:** என்ன மல்லிகா என்ன விஷயம்.

**மல்லிகா:** அதாண்டி, நேற்று உன்னிடம் சொன்னேனே.

**தேவிகா:** ஓ! அதுவா (மோகன் பக்கம் திரும்பி) உங்கள் சூப்பர்வைசர் ராஜனிடம் சொல்லி கொஞ்சம் நாலு காசு பார்க்கச் சொல்லுங்களேன்.

**மோகன்:** அவர் திருந்துகிற ஆள் இல்லை. நேர்மையாக நடக்கணும். அரசாங்கம் நமக்குத் தருகின்ற சம்பளத்திற்கு உண்மையாக உழைக்கணும். ஏழை மக்களுக்கும் எல்லாம் கிடைக்கப் பாடுபடணும் என்று தத்துவம் பேசிக் கொண்டிருக்கின்ற வேதாந்தி அவர். வருகின்ற வரை சம்பாதித்து விட்டு ஒதுங்கிப் போய் ஜாலியாக வாழ்ந்து விட்டுப் போகலாம் என்று எத்தனையோ முறை அவரிடம் சொல்லிச் சலித்துப் போய் விட்டேன்.

**தேவிகா:** உன் கணவர் இப்படி அடம் பிடித்தா எப்படிச் சம்பாதிக்க முடியும்.

**மல்லிகா:** அதனால் தான் சொல்லிச் சொல்லிப் பார்த்து விட்டு நான் என் அம்மா வீட்டிற்கு போய்விடலா என்று முடிவு செய்து விட்டேன்.

**தேவிகா:** அவர் சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவா குழந்தைகள் படிக்க வேண்டாமோ?

**மல்லிகா:** அப்படிச் செய்தாலாவது அவருக்குப் புத்தி வருகிறதா என்று பார்க்க வேண்டியது தான்.

**மோகன்:** முயற்சி செய்து பாருங்கள்.

**மல்லிகா:** எல்லாம் ஆண்டவன் விட்ட வழி.நான் வர்றேன் தேவிகா.



தொடரும்...

திரு இராஜகை நிலவன், மும்பை

# அ.கி.பரந்தாமனார்

## கட்டுரை

### பிறப்பு

அ. கி. பரந்தாமனார் 1902 சூலை 15 ஆம் நாள் சென்னையில் வாழ்ந்த கிருட்டிணசாமி — சிவக்கியானம் இணையரின் நான்காவது மகவாகப் பிறந்தார்.

### கல்வி



சென்னை வேப்பேரியில் உள்ள தூய பவுல் (செயின்ட் பால்) உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதிவரை பயின்றார். பணியிலிருந்து விடுப்புபெற்று சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பயின்று இடைக்கலை (Intermediate) நிலையையும் அரசியல், வரலாறு ஆகியவற்றைச் சிறப்புப் பாடங்களாகப் பயின்று இளங்கலை (Bachelor of Arts) பட்டத்தையும், 1949 ஆம் ஆண்டில் முதுகலை (Master of Arts) பட்டத்தையும் பெற்றார்.

### பணி

அ. கி. பரந்தாமனார் பள்ளிப் படிப்பினை முடித்ததும் ஓராண்டு சென்னை கர்னாடிக் பஞ்சாலையில் எழுத்தராகப் பணியாற்றினார். பின்னர் சென்னை வேப்பேரியில் உள்ள தூய பவுல் உயர்நிலைப் பள்ளியில் ஏறத்தாழ 24 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அதன் பின்னர் 1950 சனவரி 8 ஆம் நாள் மதுரையில் உள்ள தியாகராசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார். அங்கு 17ஆண்டுகள் பணியாற்றி 1967 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

### பாராட்டுகள்

அ. கி. பரந்தாமனாருக்கு 60 ஆம் அகவை நிறைந்ததும் மதுரை திருவள்ளுவர் கழகம் அவருக்கு மணிவிழா கொண்டாடியது. அப்பொழுது மதுரை எழுத்தாளர் மன்றம் அவருக்குப் பைந்தமிழ்ப் பாவலர் என்னும் பட்டத்தை வழங்கியது.

திரு அ வில்சன், இதழாசிரியர்

# அ.கி.பரந்தாமனார்




## பாராட்டுகள்

தஞ்சையில் 1981ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. அவ்விழாவில் அ. கி. பரந்தாமனாருக்கு தமிழக அரசின் திரு. வி. க. விருது வழங்கப்பட்டது.

## படைப்புகள்




காதல்நிலைக் கவிதைகள் (1954)
எங்கள் தோட்டம் (1964) - சிறுவர் பாடல்
பரந்தாமனார் கவிதைகள்
கவிஞராக
நல்ல தமிழ் எழுத வேண்டுமா?
தமிழ் இலக்கியம் கற்க
திருக்குறளும் புதுமைக் கருத்துக்களும் (1963)
பன்முகப் பார்வையாளன் பாரதி
பேச்சாளராக
மதுரை நாயக்கர் வரலாறு
திருமலை நாயக்கர் வரலாறு
தலைசிறந்த பாண்டிய மன்னர்கள்
வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும்
வாழ்க்கைக்கலை
கோமஸ்



## மறைவு

அ. கி. பரந்தாமனார் 1986 ஆம் ஆண்டில் சென்னையில் மரணமடைந்தார்.

**நன்றி**

குழந்தை இலக்கிய முன்னோடிகள், ஆர்.வி.பதி
https://ta.wikipedia.org/wik

திரு அ வில்சன், இதழாசிரியர்

அகர முதல இலக்கியப் பேரவை

தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

# நாளை நமதே

## மனதால்
## வலிமை கொள்
## உன்னை வீழ்த்த
## யாரும் இல்லை

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com